**தேயிலை மற்றும் இறப்பர் சிறுவுடமையாளர்களினை பலப்படுத்தல் செயற்திட்டம் - 2017**

தேயிலை மற்றும் இறப்பர் சிறுவுடமையாளர்களினை பலப்படுத்தல் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிக்கும் விவசாய அபிவிருத்திக்கான சா்வதேச நிதியத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஏப்ரல் 26 ஆந் திகதிய 2000001447 ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் XI ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டப் பகுதியிலுள்ள தேயிலை மற்றும் இறப்பர் சிறுவுடமையாளர்களின் உற்பத்தி, இலாபத்தன்மை மற்றும் மீட்சியடையும் பொருளாதார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 8,502 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 65.40 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 3,349.30 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 25.76 மில்லியன் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியளிப்புச் செய்வதற்கு இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஆகஸ்ட் 15 இல் தொடங்கியிருந்ததுடன் 2021 ஏப்ரல் 23 இல் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமா்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்கள் மற்றும் செயற்திட்ட கணக்காய்விற்கான விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதிய வழிகாட்டல்கள் போன்றவற்றிற்கு இணங்க மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமா்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால்

மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமாவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் போன்றவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) விஷேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால்திருப்திகரமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன என்பதும்,

(ஒ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் தகவல்கள் மற்றும் ஐஎவ்ஏடி வழிகாட்டிகளிற்கிணங்க நியமங்களுக்கிணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விஷேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புகளுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக்கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

2016 மார்ச் 24 ஆம் திகதிய 1/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 1.3 ஆம் பந்தியின் பிரகாரம், உரிய செயற்திட்டத்தினுடைய மொத்த கிரயத்தில் 60 சதவீதத்தினை கூடியதாக செயற்திட்டத்தின் வெளிநாட்டு நிதியளிப்பின் கூறுகள் இருந்ததால் மாத்திரம் செற்திட்டமானது வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டமாக கருதப்பட வேண்டும். இந்தச் செயற்திட்டத்திற்கான விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் பங்களிப்பு ஐ.அ.டொலர் 65.40 மில்லியன் மொத்தக் கிரயத்தின் 39 சதவீதத்திற்கு வரையறுக்கப்பட்டிருந்த போதும் இது வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டமாக கருதப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதும் 2017 திசெம்பர் 31 வரையுமான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற் கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மிலலியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன | ஐ.அ.டொலர் மில்லியன | ரூபா மில்லியன் |
| ஐஎவ்ஏடீ | 25.76 | 3,349.30 | 400.00 | 1,787 | 273.84 | 1.911 | 292.86 |
| பங்குபற்றும் வங்கிகள் | 3.25 | 422.60 | - | - | - | - | - |
| பயனாளிகளின் பங்களிப்பு | 3.61 | 469.20 | - | 0.009 | 1.44 | 0.009 | 1.44 |
| தனிப்பட்ட தரப்பினர் | 0.02 | 1.90 | - | - | - | - | - |
| இலங்கை அரசாங்கம் | 32.76 | 4,259.00 | 900.00 | 0.185 | 28.41 | 0.236 | 36.27 |
| **மொத்தம்** | **65.40** | **8,502.00** | **1,300.00** | **1,981** | **303.69** | **2.156** | **330.57** |

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 400 மில்லியன் தொகைகள் ஒதுக்கீடுகள் வெளிநாட்டு நிதியளிப்பு கூறின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 911 மில்லியன் கிரயத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு செயற்திட்டமானது மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத்திட்டத்தை தயாரித்திருந்தது. ஆகையால், மீளாய்வாண்டிற்கான செயற்நடவடிக்கைத் திட்டமானது பொருத்தமான வகையில் தயாரித்திருக்கவில்லையென சுட்டிக்காட்டியிருந்தது.

### 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

செயற்திட்டமானது தேயிலை சிறு நிலவுடையாளர்களின் அபிவிருத்தி அதிகாரசபை, இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் போன்றவற்றிற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கும் 04 பங்குபற்றும் கடன் நிறுவனங்களினால் அமுல்படுத்தப்பட்ட கடன் திட்டங்களினூடாக நிதிகளை வழங்குவதற்கும் 03 கூறுகளை கொண்டிருந்தது. ஆகையால், மீள்நடுகை நோக்கத்திற்காக காலி மாத்தறை, இரத்தினபுரி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலுள்ள தேயிலை சிறு நிலவுடையாளர்களிற்கும் புதிய நிலநடுகை நோக்கங்களிற்காக அம்பாறை மற்றும் மொனராகலை நிலவுடமையாளர்களிற்கும் மாவட்டத்திலுள்ள இறப்பர் உடமையாளர்களிற்கும் ஆதரவழிப்பதற்காககவும் செயற்திட்டத்தால் உதவித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டது. மேற்கூறப்பட்ட 03 கூறுகளின் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 அனைத்துக் கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு ரூபா 329 மில்லியன் மொத்த தொகை செலவழிக்கப்பட்டிருந்ததுடன் அத்தொகையில் மொத்த செலவினத்தில 61 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற ரூபா 203 மில்லியன் தொகை மாத்திரம் செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்குஏற்படுத்தப்பட்டிருந்த அதேநேரம் மொத்தச் செலவினத்தில் 18 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற ரூபா 59.30 மில்லியன் உத்தியோகத்தர் மிகையூதியத்தை உள்ளடக்கி மொத்த செலவினத்தில் 38 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்துகின்ற ரூபா 127.57 மில்லியன் மிகுதித் தொகை செயற்திட்ட மேற்பார்வை நோக்கங்களிற்காக செலவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வருடாந்த வேலைத்திட்டத்தின் பிரகாரம், தேயிலை சிறுநிலவுடையாளர்களின் அபிவிருத்திக்கூறின் கீழ் தேயிலை சிறு நிலவுடமையாளர்களிற்கான சந்தை நோக்கிய உற்பத்தி உதவி மற்றும் சந்தை பல்வகைப்படுத்தலிற்காக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 671 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், அதற்காக எந்தவித நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றமொன்று 2017 திசெம்பர் 31 இலும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(இ) புதிய மீள்நடுகை நோக்கங்களிற்காக மீளாய்வாண்டின் போது தேயிலை பயிர்களின் சிறுநிலவுடமையாளர்களிற்கு ரூபா 135.28 மில்லியன் கூட்டுத்தொகையான மானியங்கள் வழங்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 35.65 மில்லியன் மானியங்களின் கீழ் பயிர்ச்செய்கை செய்யப்பட்ட காணிகள் மீதான எந்தவித அறிக்கைகளும் கணக்காய்விற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், புதிய பயிரிடுகை நோக்கங்களிற்காக அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலுள்ள சிறுநிலவுடமையாளர்களிற்கு மீளாய்வாண்டின் போது 300,000 இறப்பர் பயிர்களை விநியோகிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், 93,000 பயிர்கள் மாத்திரம் அத்தகைய மாவட்டங்களிலுள்ள சிறுநிலவுடமையாளர்களிற்கு விநியோகிக்கப்பட்டிருந்தது.

(உ) இறப்பரை புதிதாக நடுதல் நோக்கங்களிற்காக விவசாயிகளின் காணிகளை விடுவிப்பதற்காக அம்பாறை மாவட்டத்திலுள்ள காட்டு காணியின் 280 ஹெக்டேயர்களினை எல்லைக்கோடிடடல் மற்றும் அளவையிடுவதற்காக 2017 நவம்பர் 23 இல் காட்டுத் திணைக்களம் ரூபா 1.75 மில்லியன் தொகை செலுத்தியது. எனினும், அதற்கான நடவடிக்கைகளை 2018 மே 31 இலும் தொடங்கியிருக்கவில்லை.

(எ) செயற்திட்ட வேலைத்திட்டத்தின் பிரகாரம், கிராமிய நிதியளிப்பின் கூறின் கீழ் தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களிற்காக கடன் வசதிகளை வழங்குவதற்காக ரூபா 139.89 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், உரிய கூறின் கீழ் கடன் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு 2017 திசெம்பர் 31 வரையிலும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.